சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.06.03.2025

O.S.No.173/2019

PW 2 : பிரசன்னம் (வயது 55 ) த/பெ.நல்லையன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதிகளை எனக்கு அவர்களது சிறு வயதிலிருந்தே தெரியும். நாராயணன் தாத்தா தான் அருணாச்சலம் ரெட்டியார். அருணாச்சலம் ரெட்டியாருக்கு சுந்தரம் ரெட்டியார் என்ற ஒரே வாரிசு தான். சுந்தரம் ரெட்டியாருக்கு நாராயணசாமி, துரைசாமி, பங்காரம்மாள் ஆகீய வாரிசுகள் உள்ளார்கள். துரைசாமி தனலெட்சுமிக்கு கடன் பட்ட விவரம் எனக்கு தெரியாது. துறையூரில் தனலெட்சுமி துரைசாமி மீது வழக்கு தாக்கல் செய்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி துறையூர் வழக்கில் தாவா சொத்து ஏலம் விடப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. நிறைவேற்று மனு தாக்கல்செய்து தனலெட்சுமி அம்மாள் தாவா சொத்தின் சுவாதினம் எடுத்தது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு ஆள்வரைக்கு மாற்றப்பட்டு, வழக்கு இலால்குடி நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்து, ஏல சான்று வழங்கியது பற்றி எனக்கு தெரியாது. ஏல சான்றிதழின் படி தனலெட்சுமி சுவாதினம் எடுத்தது பற்றி எனக்கு தெரியாது. வழக்கினை வாதி எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். தனலெட்சுமி அம்மாள் சொத்தை அபகரிக்க பார்க்கிறார் என்பதால் சொத்தின் அருகாமையில் உள்ள என்னை சாட்சியம் அளிக்குமாறு வாதி அழைத்ததின்பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். தனலெட்சுமி அம்மாள் வழக்கு சொத்தின் சுவாதினத்தை எடுத்த விவரம் பற்றி தெரிந்தும் பின் யோசனையுடன் வாதிகள் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தனலெட்சுமி என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. வாதிகள் எனக்கு மிகவும் பழக்கம் ஆனவர்கள் என்பதால்,

பின் யோசனையுடன் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>**- இல்லை.

/Signed /
பிரசன்னம்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

sd/-Tmt.R.Mohana.,B.L,
சார்பு நீதிபதி
இலால்குடி